# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விசேட அறிவித்தல்

### ஹோமியோபதி மருத்துவப் பயிற்சியாளர்களின் பதிவுக்கான தேர்வு - 2023

*2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தின் 30 (3) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் அறிவித்தல்*

*ஹோமியோபதிச் சட்டத்தின் 30 (1) ஆம் பிரிவின் கீழ் ஹோமியோபதி வைத்தியராக பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பித்திருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவின் கீழ் நடக்கவிருக்கும் எழுத்துமூல பரீட்சை 2023, சனவரி மாதம் 16 ஆந் திகதி முதல் 20 ஆந் திகதி வரை மற்றும் சனவரி மாதம் 23 ஆந் திகதி முதல் 26 ஆந் திகதி வரை சிறி தம்மாராமய இல. 144, ஹைலெவல் பாதை, நுகேகொடை என்ற விலாசத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறவிருக்கிறது என்பதை அறியத்தருகின்றோம்.*

*பதிவாளர்,*
*ஹோமியோபதி மருத்துவ கவுன்சில்,*
*இலக்கம் 94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை,*
*வெலிசர,*
*ராகம.*

*01-97*

---

## பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

### தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் - இலங்கை

பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ தொழில்நுட்ப இளமானி (கௌரவ)

### மாணவர் நுழைவு அனுமதி மற்றும் தகுதியின் அடிப்படையில் புலமைப்பரிசில் வழங்குதல் கல்வியாண்டு - 2023 இணைத்துக் கொள்ளுதல்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது *1979* ஆம் ஆண்டின் *45* இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டதாகும். இது பெருந்தோட்ட கைத்தொழிலில் இணைந்திருப்போர் மற்றும் பெருந்தோட்டத் தொழிற்துறையுடன் இணைந்துகொள்ள விரும்புவோரின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உயர்த்துவதில் கவனம் செலுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் கல்வி மற்றும் தொழில்சார் அமைப்பான பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ளது. அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் எம்.டி.எச் ஜெயவர்தன மாவத்தையில் அமைந்துள்ளது.

தொழிற்கல்வி, தொழில்நுட்ப பல்கலைக்கழகம், இலங்கை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற சட்டம் *2008* ஆம் ஆண்டின் *31* ஆம் இலக்கத்தின் கீழ் முறையாக இணைக்கப்பட்ட பல்கலைக்கழகம், அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் *100*, கந்தவல வீதி, இரத்மலானையில் உள்ளது.

தொழில்நுட்ப இளமானி (கௌரவ) பட்டம் எட்டு கல்வி தவணைகளைக் கொண்டுள்ளது. முதல் மூன்று வருடங்களை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் பொதுப் பட்டப்படிப்பை திருப்தியாக நிறைவு செய்யும் எந்தவொரு மாணவரும் ஆறாவது கல்வித்தவணை நிறைவடைந்தவுடன் வெளியேறுவார்கள்.

| | | |
|---|---|---|
| காலம் | : | 3 ஆண்டுகள் (பொது) / 4 ஆண்டுகள் (கௌரவ) |
| மொழி | : | ஆங்கிலம் |
| பாடநெறி கட்டணம் | : | ரூபா 499,000.00 (பொது) / ரூபா 655,000.00 (கௌரவ)<br>(தவணை அடிப்படையில் செலுத்தலாம்)<br>தகுதியின் அடிப்படையில் உதவித்தொகை வழங்கப்படும். (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)<br>கடன் வசதி ஏற்பாடு செய்யப்படும். |

**நுழைவுத் தகைமைகள் :**

1. விஞ்ஞான பிரிவு, தொழில்நுட்பம் அல்லது உயிரியல் பாடத்தில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் (பொது ஆங்கிலம் தவிர) குறைந்தபட்சம் "எஸ்" தரத்தில் ஒரே அமர்வில்,

அல்லது

2. க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் (பொது ஆங்கிலம் தவிர்ந்த) குறைந்தபட்சம் "எஸ்" தரத்தில் ஏதாவது ஒரு பாடத்தில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருப்பதுடன், பெருந்தோட்டத் துறை சார்ந்த துறையில் நிர்வாக தரத்தின் தரத்தில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட அனுபவத்துடன்

அல்லது

3. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தால் நடத்தப்படும் பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா அல்லது பெருந்தோட்ட முகாமைத்துவ தேசிய டிப்ளோமா *

அல்லது

4. இலங்கையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) சான்றளிக்கப்பட்ட பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்பம் அல்லது பெருந்தோட்ட விரிவாக்க முகாமைத்துவத்தில் NVQ நிலை 5 அல்லது 6 தகைமை, *

அல்லது

5. மேற்படி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய துறைகளில் தொழிற்கல்வி தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் ஆகியவற்றின் கல்வி பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் வேறு ஏதாவது டிப்ளோமா, *

(*) பாட விலக்களிப்புகள் தொடர்பாக கல்விசார் தகைமைப் பதிவுகளின் மதிப்பீட்டிற்குப் பின்னராக பரிசீலிக்கப்படும்.

பட்டப்படிப்பு பாடநெறிக்காக முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2023 பெப்புருவரி 10, அல்லது அதற்கு முன்னராக அனுப்பி வைக்கலாம். விண்ணப்பங்கள் பின்வரும் வடிவத்தில் "பணிப்பாளர் / CEO தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், எம். டி. எச். ஜெயவர்தன மாவத்தை, அதுருகிரிய, இலங்கை" எனும் முகவரிக்கு அனுப்பலாம். அல்லது www.nipm.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக நிகழ்நிலை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

**மேலதிக விபரங்களுக்கு :**

011-2770232 /070-3455785/070-3455784

அலுவலக பாவனைக்கு:

| | |
|---|---|
| மாணவர் இல. | |
| B1/ B2 | |
| | |
| | |

**பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ தொழில்நுட்ப இளமானி (கௌரவ) பட்டப் படிப்பிற்கான நுழைவு அனுமதி விண்ணப்பம் - கல்வியாண்டு -2023**

முழுப் பெயர்: வண. /திரு./ செல்வி /திருமதி

முதல் எழுத்துடன் பெயர் :

தொடர்புக்கான முகவரி :

நிரந்தர முகவரி :

மாவட்டம் :

மின்னஞ்சல் முகவரி :

பிறந்த திகதி : திகதி : மாதம் : ஆண்டு :

பால்நிலை : ஆண் பெண்

இனம் :

தேசிய ஆளடையாள அட்டை / கடவுச்சீட்டு இல. :

செல்லிடப்பேசி இல. : வட்சப் இல. :

குடியியல் நிலை: திருமணமானவர் : திருமணமாகாதவர் :

**சாதனைகள் :**

ஏதேனும் விசேட சாதனைகள் அல்லது அடைவுகள் (சர்வதேச அல்லது தேசிய விருதுகள், கண்டுபிடிப்புகள், புத்தாக்கங்கள், ஆக்க உரிமை) இருந்தால், கீழே உள்ள வெற்றிடத்தில் குறிப்பிட்டு, அவ்வாறான அடைவுகளை உறுதி செய்ய தேவையான சான்றுகளைச் சமர்ப்பிக்கவும்.

.............................................................................................................................................................................................
.............................................................................................................................................................................................
.............................................................................................................................................................................................

---

முன்னுரிமை கற்கை நெறி வகை [வார நாட்கள்/வார இறுதி நாட்கள்] : ....................

---

**நிதி :**

தொழில்வாண்மை கற்கைநெறிக்காக நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய நிதியை எவ்வாறு பெறுவீர்கள்? ( சுயமாக /நன்கொடை) ……………………………
அனுசரணை கிடைக்கும் எனின், யாரிடமிருந்து?
…………………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………………

திகதி : ………………………………  அனுசரணையாளர் கையொப்பம் : …………………………

---

என்னால் விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் எனது அறிவின்படி உண்மையானதும் சரியானதும் என்று இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

இந்த விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் தவறானது என தெரியவந்தால், அதனால் ஏற்படும் விளைவுகளை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன்.

திகதி:……………………………………  விண்ணப்பதாரியின் கையொப்பம் :………………

01-99

